4th March 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தாசில்தாரோ மற்ற அதிகாரிகளோ வசூலிக்கவில்லை. வருவதைப் பெற்றுக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டும். மாணவர்கள் வசூலித்தது எவ்வளவு, தொழிலாளர்கள் வசூலித்தது எவ்வளவு என்பன போன்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த மாநிலத்திலே இவ்வளவு பெரிய தொகையைக் காங்கிரஸ்காரர்கள்தான் மாவட்ட வாரியாக முயற்சி எடுத்து வசூலித்திருக்கிறார்கள் ; எதிர்க்கட்சியினர் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த மாதிரி விஷயங்களை எல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் மன்றத்திற்கு வெளியே பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொள்ளலாம்.

* 175 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு ரூபாய் என்று பாதுகாப்பு நிதி அரசாங்க அலுவலர்களால் வசூலிக்கப்பட்டதா ?

(இ) அதன் மூலம் வசூலான தொகை மாவட்டவாரியாக எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

**திரு. செ. மாதவன் :** பாதுகாப்பு நிதியைக் குறிப்பிட்ட அதிகாரிகள்தான் வாங்கவேண்டும் ; அமைச்சர்களோ, தலிப்பட்டவர்களோ பாதுகாப்பு நிதி வசூலிக்கும்போது அந்தந்த மாவட்ட கலெக்டரின் அனுமதி பெற்றுத்தான் வசூலிக்கவேண்டுமென்று கூறப்பட்டது. காங்கிரஸ் தலைவர் அவர்கள் முன்னிலையிலே நிதி வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பாகவே அரசாங்கம் அனுமதி கொடுத்ததா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பணம் கொடுக்கிறவர்கள் யாரிடத்தில் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் ரசீது கொடுக்க முடியாது. யார் பெற்றாலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்து ரசீது வாங்கி அனுப்ப வேண்டும் என்பதுதான் முறை.

* 176 கேள்வி:—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் முதல் அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசீய பாதுகாப்பு நிதி என்ற பெயரால் பல்வேறு நபர்களாலும் வசூலிக்கப்படும் தொகையைச் சரிவரக் கணக்கில் கொண்டு வர அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

(இ) அவ்வாறு கணக்கில் வாராத தொகைகள் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?